# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்: ......................

**பகுதி 1 இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். பகுதி 11 இல் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கீறிட்ட இடங்களிற்கு பொருத்தமான சொல்லை எழுதுக.

1. ரௌத்திர இரஸத்தினுடைய ஸ்தாயி பாவம் ____________________ ஆகும்.

2. அஷ்டபதி ____________________ இயற்றப்பட்டது. இது ____________________ சரணங்களை உடையது.

3. தன்னை சேர்ந்த எல்லா ஸ்த்ரீகளிடத்திலும் சமமான பிரியங்கொண்ட நாயகன் ____________________ ஆவான்.

4. வர்ணத்தின் உத்தராங்கம் என்பது ____________________ ____________________ என்பவற்றைக் கொண்டது.

5. கண்ட கதியில் அமைந்த கண்ட ஜாதி ரூபகதாளத்தின் எண்ணிக்கை ____________________ ஆகும்.

6. வீர ரஸத்தின் வகைகள் ____________________ ____________________ ____________________ ____________________ ஆகும்.

7. சிருங்கார நாயகர் ____________________ ____________________ ____________________ ஆவர். தந்திரமும் வஞ்சகமும் கொண்ட நாயகன் ____________________ ஆவான்.

8. பீபத்ஸ் ரஸத்தின் நிறம் ____________________ ஆகும்.

9. நெருங்கிய நட்பு உண்டாகிய இருவர் பிரிந்து போதல் ____________________ சிருங்காரம் எனப்படும்.

(ம.ப.பா)

10. நாயகன் நாயகியைச் சேர்த்து வைப்பதில் திறமையுடையவன் ______________________ ஆவான்.

11. $|_9\ |_9\ O_2\ O_2$ இவ் அடையாளத்தை எடுத்துக்கொள்ளும் தாளம் ____________________ ஆகும்.

12. வண்ண வண்ண சேலை கட்டும் மீனாட்சி என்ற கீர்த்தனையை பாடியவர் ___________________________.

13. மன்மத விலாசத்தில் பிரியங்கொண்டு நாயகனைப் பின் தொடர்பவள் __________________ ஆவாள்.

14. இடி, மின்னல், பூகம்பம், எரிமலை ஆகியவற்றின் நிகழ்வுகளால் உண்டாகும் ரஸம் _______________________ ஆகும்.

15. புன்னகை செய்வதை குறிக்கும் ஹாஸ்ய ரஸத்தின் பெயர் ________________________ ஆகும்.

16. தன்னையும் தன் சுற்றத்தையும் அலங்கரித்து எதிர்பார்த்து காத்திருக்கும் நாயகி _________________ ஆவாள்.

17. ஸ்தாயி பாவம் என்பது _________________________ ஆகும்.

18. 35 தாளங்களில் அதி குறைந்த எண்ணிக்கையுடைய தாளம் _____________________ ஆகும்.

19. “தஞ்சை பெருவுடையார் பேரிசை” என்ற நூலை எழுதியவர் ______________________ ஆவார்.

20. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் (IITA) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு ______________.

(20x1=20 புள்ளிகள்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி இரண்டு

சுட்டெண்: ......................

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அ. பதவர்ணத்தின் இலட்சணத்தைத் தருக. (5 புள்ளிகள்)

   ஆ. வர்ணத்தின் பிரிவுகள் எவை? அவற்றின் பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)

   இ. வர்ணத்தில் இடம்பெறும் இருபகுதிகளும் எவை? (2 புள்ளிகள்)

   ஈ. நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், நடன அமைப்பு என்பவற்றை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   உ. நீர் கற்ற பதவர்ணத்தின் முதலாவது தீர்மானத்தினையும் மூன்றாவது சரண ஸ்வர சாகித்தியதையும், அதற்கான கோர்வைகளையும் தாள அங்க அறுதிக் குறியீட்டுடன் எழுதுக. (8 புள்ளிகள்)

2. சிறுகுறிப்பு எழுதுக.

   அ. அயோக சிருங்காரம் ஆ. திரோத்ததன்

   இ. அனுபாவம் ஈ. ஸ்வீயா (15 புள்ளிகள்)

3. பின்வரும் தாளங்களுக்குரிய அங்க அடையாளம், அட்சர எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

   அ. திஸ்ரகதி சதுஸ்ரஜாதி துருவதாளம்

   ஆ. கண்டகதி மிஸ்ரஜாதி திரிபுடதாளம்

   இ. சதுஸ்ரகதி திஸ்ரஜாதி அடதாளம்

   ஈ. திஸ்ரகதி கண்டஜாதி மட்டியதாளம்

   உ. மிஸ்ரகதி சதுஸ்ரஜாதி ரூபகதாளம் (15 புள்ளிகள்)

4. அ. அஷ்டவித நாயகிகளை எழுதுக.

   ஆ. அவர்களின் இலக்ஷிணங்களை விளக்குக. (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

5. பயானக ரஸத்தினுடைய பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்குக. ஸ்தாயிபாவம், எதிர்ரஸம், நிறம், தேவதை விபாவம், சாத்வீகபாவம் (15 புள்ளிகள்)

6. ஈழத்து கலைஞர் ப்ரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் நடனக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை தொகுத்து எழுதுக. (15 புள்ளிகள்)

7. நாயகனின் தோழர்கள் அல்லது நாயகியின் தோழிகளை வகைப்படுத்தி அவர்களின் குணஇயல்புகள் பற்றி விளக்குக. (15 புள்ளிகள்)